215

12 OCT 1937

ஓம் சிவம்

# சேக்கிழார் வெண்பா மாலை

இது

திருப்பணிப் பேட்டை,

திருவாளர் கா. தொ. சுப்பையா முதலியாரால்

இயற்றப்பட்டுப்,

பல்லாவரம்

பொதுநிலைக்கழக நிலையத்திலுள்ள

டி. எம். அச்சுக்கூடத்திற்

பதிப்பிடப் பட்டது

1932

All Rights Reserved.

O-,194M578,S
M32
142882

ஓம் சிவம்

# சேக்கிழார் வெண்பா மாலை

இது

திருப்பணிப் பேட்டை,

திருவாளர் கா. தொ. சுப்பையா முதலியாரால்

இயற்றப்பட்டுப்,

பல்லாவரம்

பொதுநிலைக்கழக நிலையத்திலுள்ள

டி. எம். அச்சுக்கூடத்திற்

பதிப்பிடப் பட்டது

1932

All Rights Reserved.

உ

கணபதி துணை

# சேக்கிழார் வெண்பாமாலை

## திருக்குறள்

### முதல் அதிகாரம்—கடவுள் வாழ்த்து.

அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகென்-றகனமர்ந்
தன்றுரைத்த லானம் மருண்மொழித் தேவர்முத
லென்றுணர்நெஞ் சேயுலகுக் கின்று.

கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவ
னற்று டொழாஅ ரெனினென்னு—முற்றுணரெந்
தேவர்திரு வாக்கைத் தெளிந்துநஞ் சேக்கிழார்
பூவடியைத் தாழ்நெஞ்சே போந்து.

மலர்மிசை யேகினுன் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வாரென்—றலகில்புகழ்
நாயனு ரோதுகுற ணன்குணர்ந்து சேக்கிழார்
தூயகழல் சேர்வீர் தொழுது.

வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யிலவெனலா—லீண்டுதிருத்
தொண்டர்புரா ணம்பாடுந் தோன்றல்கழ லென்றுமுளங்
கொண்டவருக் குண்டோ குறை.

இருள்சே ரிருவினையுஞ் சேரா விறைவன் (தேர்ந்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டென்-றருண்மொழி
தோங்குபொழில் சூழ்குன்றத் தூரெந்தை மெய்ப்புகழை
யீங்குரைசெய் வார்க்கே திடர்.

பொறிவாயி லைந்தவித்தான் பொய்தீ ரொழுக்க
நெறிநின்றார் நீடுவாழ் வாரென்—றுறுதிபெற
வோதுகுறள் கண்டிங் கொளிர்சேக் கிழார்தமையிப்
போதுகுரு வாய்ப்பணிவீர் போந்து.

தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தார்க் கல்லான்
மனக்கவலை மாற்ற லரிதா—மெனத்தேவர்
செப்புதலா லொப்பில்புகழ்ச் சேக்கிழார் பொற்கழலை
யிப்புவியிற் சேர்வீ ரினிது.

அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்
பிறவாழி நீந்தலரி தென்னு—நறுமலரோன்
வாக்கறிந்து செம்பியற்கோர் மந்திரியாஞ் சேக்கிழார்
பூக்கழலைச் சேர்வீர் புகழ்ந்து.

கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்
றாளை வணங்காத் தலையெனலா—லாளுமருட்
சேக்கிழார் பொற்கமலச் சேவடியைத் தாழ்தல்பெரும்
பாக்கியமா நெஞ்சே பணி

பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா
ரிறைவன்டி சேராதா ரென்னுங்—குறளன்பிற்
சிந்தித்து நெஞ்சேநஞ் சேக்கிழார் தாண்மலரை
வந்தித்துள் வைப்பாய் மகிழ்ந்து.

போதன்மூ வர்க்கும் புகல்கடவுள் வாழ்த்துமன்று
ணுதனரு ளாற்றொண்டர் நற்கதையை---யோதுமிப
மேங்கிசையார் குன்றைமுனிக் கின்றுவனைந் தேனென்றே
ரீங்கிசையார் குற்ற மிதற்கு.

கணபதி துணை

காப்பு

நீர்பரவுந் தில்லை நிருத்தன் றிருத்தொண்டர்
சீர்பரவுங் குன்றத்தூர்ச் சேக்கிழார்—பேர்பரவப்
பொற்பமர்மே லைக்கோ புரத்தின்கண் வீற்றிருக்குங்
கற்பகவி நாயகர்தாள் காப்பு.

பேரார் திருப்பணிப் பேட்டைநஞ் சுந்தரற்கும்
போரார்வேற் கண்ணன்ன பூரணிக்குஞ்—சீரார்முற்
புத்திரனை யேழுலகும் போற்றுமொரு நீடுதிக்கை
வத்திரனை நெஞ்சே வணங்கு.

ஆமாலை நீக்கி யடியேற்குன் மீதுவெண்
பாமாலை பாடவருள் பாலிப்பாய்—பூமாலை
தேனார் குவளையணி செம்புயனே பைம்பொன்மதில்
வானார்வண் குன்றையிறை வா.

கல்லாதா னொட்பங் கழியநன் றாயினுங்
கொள்ளா ரறிவுடை யாரெனும்வாக்—குள்ளாம
லாதனும்வெண் பாமாலை யன்பாலெஞ் சேக்கிழார்க்
கோதுவதாற் கொள்வா ருவந்து.

தென்னவனஞ் சூழுந் திருப்பணிப்பேட் டைத்தளியின்
முன்னவராஞ் சுந்தர மூர்த்திதிருச்—சந்நிதியிற்
சற்றுவில கித்தென்பாற் றாழ்ந்துநிற்குஞ் சேக்கிழார்
பொற்றுணைநற் றாடுணையாம் போற்று.

(சேர்ந்

அன்புடையீர் சொல்வீர்பொன் னம்பலவன் றாணிழல்
தின்புறு நஞ் சேக்கிழா ரின்றருளாற்—றன்படிவங்
கொண்டுசுந்த ரேசர்திருக் கோயிலிட மாவிளங்கல்
கண்டுதொழார்க் குண்டோ கதி.

தூயா லயம்போய்த் தொழுவது சாலவுநன்
றேயா மெனுமௌவை யின்னருள்வாக்—கோயாமற்
சிந்திப்பார் நித்தனருள் சேர்சேக் கிழார்தம்மை
வந்திப்பார் சந்நிதியில் வந்து.

சற்குணராய்ச் செம்பியர்கோர் தக்கமுதன் மந்திரியா
யற்குபவன் றோது மருண்மொழித்தே—வர்க்குச்
சிறப்பொடு பூசனை செய்விப்பார்க் கென்றும்
பிறப்பொடிரப் புண்டுகொலோ பேசு.

ஓங்குகுன்றைத் தப்பதியி லோர்மடவ ளாகஞ்செய்
தாங்குதிருக் கோயி லமைத்திலிங்கம்—பாங்குறவைத்
தத்திருநா கேசுரமென் றம்பணிக டாம்புரிந்தா
ரெத்திசையு மேத்து மிவர்.

ஈட்ட மிவற யிசை வேண்டா வாடவர்
தோற்ற நிலைக்குப் பொறையென்னு—மாற்றமதை
யெண்ணிநஞ் சேக்கிழார்க் கேற்குநிபந் தம்புரிவார்
மண்ணிலுரூர் விண்ணிலமர் வார்.

ஆலமர்வா னன்ப ரருண்மொழித் தேவரையும்
பாலறு வாயனையும் பார்த்தரசன்—ஞாலமுழு
தாள்வீ ருமக்கடிமை யானே னெனுமன்னோர்
தாள்வீழ்வா ரெற்கோர் தமர்.

சிந்தா மணியைமகிழ் செம்பியனுட் காரோட்டு
நந்தாஞா னச்சுடரா நற்குன்றை—யெந்தாயிங்
குன்னைப் பணிக்தென்று முன்புகழ்கேட் டின்புறமா
றென்னைப் பணிப்பாய்கொ லின்று.

பொருளாறு மெல்லாமென் றீயா திவறு
மருளாறு மாறுப் பிறப்பென்—றருள்குறள்கண்
டிட்டமுத மன்பர்தமக் கெஞ்சேக் கிழார்க்குவிழா
விட்டமுடன் செய்வீ ரினிது.

என்புகல்வ ருன்மரபா மென்றிவ்வூ ருள்ளவரு
நின்புகழ்கேட் டைய நினைப்போற்றிப்-பொன்புரையுங்
கஞ்சமலர்ச் சேவடியைக் கண்டுபணிந் துய்கிலரேல்
வஞ்சநமன் றூதர் வரின்.

சோதியருள் பெற்றதிருத் தொண்டர் கலித்துறையந்
தாதியைக்கொண் டன்னோ ருருங்கதையை—பூதலமும்
போற்றப் பெரிய புராணமாப் பாடவரு
ளேற்றவரை நெஞ்சே யிறைஞ்சு.

அருளில்லார்க் கவ்வுலக மில்லை பொருளில்லார்க்
கிவ்வுலக மில்லா தியாங்கென்னுஞ்—செவ்வியசொற்
கண்டருளோம் பிச்சேவை காவலருக் காளாவா
ரண்டர்தொழ வாழ்வா ரவண்.

கூறுஞ் சமய குரவர் திருத்தொண்டர்
ஈறில் புகழ்கேட் டெணைத்துயிரும் — பேறுபெற
வெண்ணிநஞ் சேக்கிழா ரென்றுருக்கொண் டிவ்வுலகி
னண்ணினர் போலு நயந்து

கற்பவைகற் குங்குன்றை காவல்சிற் றம்பலவன்
பொற்பரவிந் தக்கழலிற் புக்கமரு — நிற்குவை
காசிப்பூ சந்தோறுங் காமர்விழாச் செய்துன்னைப்
பூசிப்பார்க் குண்டாம் புகழ்

இன்மை யெனவொரு பாவி மறுமையு
மின்மையு மின்றி வருமென்னு — மம்மொழிகண்
டஞ்சலைநெஞ் சேநம் மருண்மொழித் தேவர்கழ
றஞ்சமெனி லேதினிமேற் றாழ்வு

செந்தமிழ்வல் லோர்வாழ் சிராப்பள்ளி செய்தவமாம்
விந்தையமர் பொற்புயத்தெம் மீனாட்சி — சுந்தரப்
பிள்ளைபுகல் சேக்கிழார் பிள்ளைத் தமிழ்ச்சுவைவான்
றெள்ளமுதத் துக்குண்டோ செப்பு

கொற்றவற்கு மந்திரியாங் குன்றைநக ராதிபரைக்
கற்றவர்க்கெல் லாமிரண்டு கண்மணியைப் — பெற்றமுகந்
தேறுமரன் றொண்டர்க் கினியவரை யெப்பொழுதுங்
கூறுமவர்க் கென்ன குறை

வீழ்நாள் படாஅமை நன்றாற்றி னஃதொருவன்
வாழ்நாள் வழியடைக்குங் கல்லெனல்லால் — வீழ்நா
ளுறுத்தறஞ்செய் தெங்குன்றத் தூர்வள்ளன் மீதன்
பறுதவர்தா ளெற்கோ ரரண்

கங்கை குலதிலகர் காரு யிலினல்வர்
தங்கழருழ்ந் தேத்தியுடன் றங்குகின்ற---ரிங்கவரை
விட்டமர்த னன்ரே வெறுமையன்மற் றென்செய்வேன்
சிட்டரையாள் சுந்தரா செப்பு.

அன்றுலகெ லாமென் றளித்ததுபோ லோங்குகுணக்
குன்றெனுமந் நால்வரொடுங் கூடிமகிழ்ந்---தென்றுமிவ
ணெங்தையாஞ் சேக்கிழா ரின்பமுறப் பாரெவர்க்குந்
தந்தையாஞ் சீர்ச்சுந் தரா.

அன்றறிவா மென்ன தறஞ்செய்க மற்றது (ளாற்
பொன்றுங்காற் பொன்றுந் துணையெனும்வாக்---கின்றரு
றோர்ந்துகுரு பூசை திருத்தொண்டர் சேக்கிழார்க்
கார்ந்தன்பு செய்வீ ரமைந்து.

போற்றுதிருத் தொண்டர் புராணவர லாறன்பிற்
சாற்று முமாபதிபொற் றூடலேமே—லேற்றுநஞ்
சேக்கிழார் தம்புகழைச் செப்புவா ரிப்புவியிற்
பாக்கியவா னுவார் பணிந்து.

நாட்டுபுகழ்த் தொண்டைவள நாட்டின்க ணலாறு
கோட்டமதி லோங்குபுலி யூர்க்கோட்ட—மீட்டுதவ
மாங்குன்றத் தூரெம் மருண்மொழித் தேவதுணை
யீங்குன் றிருத்தா ளெனக்கு

இரவா ரிரப்பார்க்கொன் றீவர் கரவாது
கைசெய்தூண் மாலை யவரென்னும்—பொய்யறியா
வேளாள ரன்றே வியன்சேக் கிழார்க்கடிமை
யாளாவர் நெஞ்சே யறி.

வெம்பவப்பௌ வத்தந்தோ வீழ்ந்துழலு நாயேனின்
னம்புயத்தா ளம்பி யணுகவருள்—செம்பியனுக்
கெண்ணிறிருத் தொண்ட ரினியகதை கேட்பிக்கும்
புண்ணியநீ யோர்குருவாய்ப் போந்து.

தொண்டர்ப் புகழ்குன்றைத் தொல்பதியா ரம்பலத்தே
மிண்டைச் சடையா ரெடுத்தபதப்—புண்டரிக
வொண்ணிழலுற் றாரென் றுமாபதியா ரோதியதை
யெண்ணியவர் தாள்பணிவீ ரின்று.

தந்நலம் பாரிப்பார் தோயார் தகை செருக்கிப்
புன்னலம் பாரிப்பார் தோளென்னு—முன்னவர்வாக்
கையமறத் தேர்வா ரருண்மொழித்தே வர்க்கென்று
மெய்யன்ப ராவார் விழைந்து.

அன்புடனின் றாள்பணிவா ராடுஞ்சிற் றம்பலவன்
பொன்புரைதா ணீழற் புகவருளு—நின்பெருமை
யாருணர்வா ரன்றுபுக ழத்திருத் தொண்டரலாற்
சீருறுகுன் றைச்செல்வா செப்பு.

பாவாணர் போற்றம் பகவா வருண்மொழித்
தேவா நமவென்று சிந்தித்து—நாவார
வந்திப்பார் மேலுலகில் வாழ்வார் வழுத்தாதார்
வந்திப்பார் நொந்தழுங்கு வார்.

அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய
வொண்பொருள் கொள்வார் பிறரென்னு—மெண்புலவர்
நற்குறபேடோர்ந் தென்று நயனுடைய ராய்க்குன்றைச்
சற்குணர்தாள் சேர்வீர் சரண்.

செப்பு திருத்தொண்டர் சீர்பரவுஞ் சேக்கிழா
ரொப்பின்மர பெம்மரபென்றுள்ளுவிரே — லிப்பொழுது
வந்து சகள வடிவாய்த் திகழவரை
வந்துதரி சிப்பீர் மகிழ்ந்து.

(ரங்கிற்)

பூங்குழன்மின் னுண்மருங்குற் பொற்கொடியார் வான
பாங்குறநின் றூடும் பழம்பதியா - மோங்குகுன்றை
வாழ்வே வினையின் வயத்தாற் கருக்குழியில்
வீழ்வேன்வீ ழாமல் விரும்பு.

இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி
னவர்பழி தம்பழி யன்றென் — றுவகையுற
வோதினுமெங் தாய்வறுமை யுற்றாலு மற்றவர்பா
லேதுமிர வாதருள்வா யெற்கு.

நற்பாலி சூழ்தொண்டை நாட்டிற் புகழ்குன்றைப்
பொற்பார் திருநகரிற் பொந்து தொண்டர் — சொற்பாட
வம்பலத்தெங் கூத்த னருள்பெறுவார்க் காளாவா
ரும்பருக்கோர் நல்விருந்தா மோது

இங்குன்னை யல்லா லெளியேற் குறுதுணைமற்
றெங்குண் டதுமெய்யென் றென்றருள்வாய் - பொங்குகட
லின்னமுது மொவ்வா தெனும்புகழ்பெற் றூய்குன்றை
நன்னகரா ளெந்தாய் நவில்

இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி
னின்மையே யின்னா ததுவெனினு — மின்மையி னுன்
மாடுடையா ரைப்புகழ்தன் மாண்போநங் குன்றைவள
நாடுடையா ரைப்புகழ்த னன்கு

மாதந் தொறும்பூச மன்னுதினஞ் சேக்கிழார்க்
கேதமிறா மஞ்சனமு மின்னமுதுங்—காதலுடன்
செய்விப்பார் தம்மையுமச் சேவையர்தங் காவலனு
ருய்விப்பார் தேர்வீ ருவந்து.

கூறும்வே ளாளர் குலதிலகங் காண்களிற்றி
லேறிவரு மந்நா ளிணைக்கவரி—யீறில்புகழ்
வேந்தன் றுணைக்கரத்தால் வீசுஞ் சிவவடிவா
மேந்தல் குன் றத்தூ ரிறை.

பெரியாரைப் பேணு தொழுகிற் பெரியாராற்
பேரா விடும்பை தருமென்னுஞ்—சீரார்
மறைமொழியைக் கண்டு மடநெஞ்சே குன்றை
யிறைவரைநீ யெண்ணுத தென்.

செப்புகுன்றை மாநகர்போற் சீர்த்திருப்ப ணிப்பேட்டை
யொப்பிறவஞ் செய்ததுகொ லோருருக்கொண்-டிப்பொழுதிங்
காரருளாற் சேக்கிழா ரானு தமர்ந்தாரென்
றூரறிவா ரான்றே ரலால்

நீதியநு பாய னிகழ்தொண்டர் மாக்கதைகேட்
டாதி யருள்பெறுமா றுண்டவரைப்—பூதியக்க
மாலையணி பொன்மேனி மாதவரைக் காலையுச்சி
மாலைபணி நெஞ்சே மகிழ்ந்து.

கரவா துவந்தீயுங் கண்ணன்னர் கண்ணு
மிரவாமை கோடியுறு மென்னு—மருள்வாக்
கியம்போ லெனைபாள்வாய் கேழ்கிளருஞ் சந்த்ரோ
தயம்போல் விளங்கும் வரதா.

தீதி லரசுரிமைச் செங்கோல்விண் டோயுமிம
சேதுபரி யந்தஞ் செலுத்துமிறை—பாதமலர்
சிந்தித் திருப்பவர்தாள் சென்னிமிசை வைத்தென்றும்
வந்தித் திருப்பவரை வாழ்த்து.

போற்றதிருத் தொண்டர் புராணவிளக் குள்ளமதி
லேற்றுமடி யார்பெறும்பே றிங்கதனைச்—சாற்றுமெஞ்
சேக்கிழார்க் கென்றுஞ் சிறப்பொடுபூ சைக்குதவும்
பாக்கியமுள் ளார்க்காம் பகர்.

ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற்
கிரவி னிளிவந்த தில்லென்—றருண்மொழிதேர்ந்
தென்றுமிர வாதன்பி னெஞ்சேக் கிழார்க்காளாய்
நின்றுபணி செய்நெஞ்சே நீ.

பூமன்ன ராவார்சற் புத்திரப் பேறடைவார்
காமன்ன ராவார் கதிபெறுவார்—மாமன்னுஞ்
சீரார்குன் றத்தூரெஞ் சேக்கிழா ரைத்தொழுதிங்
காரா தரிப்பா ரவர்.

செப்பும்வே ளாண்மரபிற் சேக்கிழார் நற்குடியி
லிப்புவனங் குன்றை யெனப்புகழு—மப்பதியி
லன்றுற் பவிக்கு மருண்மொழித் தேவரிவ
ரென்றுற் றிறைஞ்சுவீ ரின்று.

எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவென்று—செப்புகுறள்
கண்டுணரேன் குன்றைநகர்க் கற்பகமே யெவ்வாறுட்
கொண்டுன் கழறொழுவேன் கூறு.

ஓதியெழுத் தைந்து முமதபய மென்றகுன்றை
யாதிப்ரைத் தில்லைச்சிற் றம்பலத் தெஞ்—சோதியருள்
பெற்றவரைத் தொண்டர் பெரியபுரா ணம்பாடு
நற்றவரைப் போற்றுவீர் நன்கு.

வன்னேயி னுலரவின் வாயிலூறுந் தேரையென
வெந்நே ரமுமிங் கினைவேனைப்—பொன்னேடு
வாணிமரு வுங்குன்றை வாழ்வேகா வாதுவிடிற்
பேணி யெவர்புரப்பார் பேசு.

செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தாரென்—றுயிர்க்குயிரா
நாயனு ரோதுகுற ணன்குணர்வார் குன்றைமுனிக்
கேயபணி செய்வா ரினிது.

தேசனட ராசன் றிருவடிசேர் வைகாசிப்
பூசமதின் மன்னுகுரு பூசைவிசு—வாசமுட
னஞ்சேக் கிழார்க்கியற்றி னுயன்மார்க் காமறிவீர்
செஞ்சேக்கை யின்மகிழ்வீர் சேண்.

ஒருவின்மலை வாங்கு முமாபதியைப் பாடும்
பொருவிலம் மூவரெனப் போற்று—மருண்மொழித்
தேவராஞ் சேக்கிழார் தென்றிருப்ப ணிப்பேட்டைக்
காவனக ருற்றூர் களித்து.

இலனென்னு மெவ்வ முரையாமை யீதல்
குலனுடையான் கண்ணே யுளவென்—றிலகுகுற
ளாய்ந்தன் புடனிகழா தற்றவர்க்கீந் தெங்குன்றை
யேந்தல்கழல் சேர்வீ ரினிது.

## சேக்கிழார் வெண்பா மாலை

142882
சென்னை-600 00
C494AS48
N32

மெய்வந் துவந்துபணி வீர்கலியிற் கண்கண்
தெய்வ மருண்மொழித் தேவரா—முய்விரந்து
பொய்யென் பவரந்தோ புத்தநந்தி போலாவர்
மெய்யென் பவர்பெறுவர் வீடு.

அல்லார் பொழிற்புலியூ ரானைப்பே சாதநா
ளெல்லாம் பிறவாநா ளென்றதனுல்—வல்லாமிம்
மாதினகி லென்று மருவாமற் குன்றைநக
ராதிபரைப் பேசலழ காம்.

சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகென்—றகிலமெலாந்
தந்தா னருண்மொழியைத் தானுணரக் குன்றத்தூ
ரெந்தா யருள்வா யெனக்கு.

தந்தைதாய் தாரந் தனையர்தமர் சூழ்ந்திடினு
மந்தகன்வந் தீர்க்கும்போ தார்தடுப்பார்—கந்தவே
ளென்னமணி மன்றா ளிறைவர்மகிழ் சேக்கிழார்
பொன்னடிநெஞ் சேபுகலாம் போற்று.

(தனைக்

நாறுமலர்க் கோதையர்மே னன்குவைக்கும் வேட்கை
கூறுசெய் தாயிரத்தோர் கூறேனு—மேறுடையா
ரன்றுலகெ லாமெனவங் காண்டவர்தாண் பீதுவைத்தா
லென்றுநல முண்டா மினி.

சிறப்பீனுஞ் செல்வமு மீனு மறத்தினூஉங்
காக்க மெவனோ வுயிர்க்கென்னும்—வாக்கதனை
யின்றுணர்வ ரேலுடையா ரெஞ்சேக் கிழார்க்கென்று
நன்றுவிழாச் செய்வார் நயந்து.

நிலவு மணிமாட நீண்மறுகு சூழு
நலமருவுங் குன்றை நகரி—லுலகியற்று
நற்றவத்தா லுற்பவிக்கு நஞ்சேக் கிழாரருளைப்
பெற்றவருக் குண்டோ பிறப்பு.

விளியாவன் னேயால் விளிவேன் விளியா
தளியா லெனையின்னே யாள்வாய்—களியானை
வீதியுலா வுங்குன்றை வேந்தே வளவனுக்கு
நீதிபுகன் மந்திரியா நீ.

செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பா
னல்விருந்து வானத் தவர்க்கென்னுஞ்—சொல்விழைந்
தவ்வண்ண மோம்பும்வே ளாளர்கு ளாமணிகா
ணிவ்வண்ணல் சேக்கிழா ரின்று.

செல்வமருள் கல்வி சிறப்புவே ளாண்மைகுலம்
பல்வளனு மெய்திப் பரமடைவார்—வெல்வளவர்
பூபதிநின் றன்றன்பிற் போற்றிவணங் குங்குன்றை
மாபதியார் சீர்பாடு வார்.

நாயிற் கடையாய் நலிபிணியாற் பூனையின்
வாயிற் கிளிபோல் வருந்துமெனை—நீயெப்
பொழுதுமழ வுக்குத்தாய் போற்புரப்பாய் குன்றைப்
பழுதினக ருற்றுய் பகர்.

அற்றூர்க்கொன் ருற்றுதான் செல்வ மிகநலம்
பெற்று டமியண்மூத் தற்றென் று—சொற்றூர்கா
ணெந்தேவ ரென்றிரப்பார்க் கீந்துவந்து சேக்கிழார்
நந்தேவ ரென்றடைவீர் நன்கு.

அத்தமும் வாழ்வு மகத்துமட் டென்றதனு (ளார்க்
லித்தரையில் வாழ்வும்போய் யென்றுணருஞ்—சித்தமு
குண்டாமென் போலிங் குழல்வார்க்குண் டோகுன்றை
யண்டாதி பாகின் னருள்.

தமர்நமக்கு நெஞ்சே தனதன்போற் பக்கத்
தமரினும்யா தொன்று மளியார்—குமரவே
ளென்னவிளங் குங்குன்றை யெந்தையைவந் தித்தொழுகி
னின்னலிலம் பாடே தினி.

நயனுடையா னல்கூர்ந்தா னுதல் செயுநீர
செய்யா தமைகலா வாறென்னு—மெய்யாநம்
வள்ளுவர்சொற் கண்டும் வழங்காரெவ் வாறுன்னே
யுள்ளுவர்குன் றைப்பதியா யோது.

வெய்யவினைக் காளாய் மெலிவே னினிப்பிரமன்
கையிலுரு தென்றான் கழலடைவேன்—வையந்
தனியாளச் சோழன் றனைநெறியிற் றப்பா
தினிதாளு மெந்தா யியம்பு.

பண்டு திருப்பதிகம் பாடச்சம் பந்தருருக்
கொண்டுவரச் செய்ததுபோற் கூறுதிருத்-தொண்டர்கதை
செப்பவிடுத் தாய்கொலயிற் சேய்சேக் கிழாரெனவந்
தொப்பில்சுந் த்ரேசா வுவந்து.

பொருளற்றார் பூப்ப ரொருகா லருளற்றா
ரற்றார்மற் றாத லரிதென்னுஞ்—சொற்றுங்கி
யாதுலருக் கீந்திங் கருண்மொழித் தேவர்புக
ழோதுமவர்க் குண்டோ வுலைவு.

உண்டொருவிண் ணப்பமெனக் குன்பான்மெய் யன்பருக்குத்
தொண்டுபுரிந் தென்றன் றணைத்திருத்தாட்—புண்டரிகத்
தண்ணிழல்சேர்ந் தின்புறுவேன் றண்டகநாட் டிற்குன்றை
நண்ணியவெந் தேவா நயந்து.

மைக்கரிய கண்ணார் வயமாய் மயங்கிமத
கைக்கரிபோ லேயலையுங் காளையர்பின்—புக்கவருக்
காளாகா தென்று மருண்மொழித் தேவாநிற்
காளாகு மாறென்னை யாள்.

நகையீகை யின்சொ லிகழாமை நான்கும்
வகையென்ப வாய்மைக் குடிக்கென்—றெகினமூர்
போதனருள் வாக்கைப் புகழ்ந்தொழுகிச் சேக்கிழார்
பாதமலர் சேர்வீர் பணிந்து

நோய்க்குவிருந் தாக்கியெனை நொந்துழலச் செய்வதினு
நாய்க்கு விருந் தாக்க னலமாமே—தாய்க்கு
மினிய வருட் குன்றைநக ரெங்கள்பெரு மானே
யினியெவரு மிங்கிகழ வே.

ஞாலத் துழலும்புன் ஞயேன் மரணந்த
காலத்தி லேனுமுனைக் கண்ணுவனோ—வாலத்தைக்
கண்டமதின் மெய்யன்பர் கண்டருளைக் கொண்டாடக்
கொண்டவன்றொண் டர்க்கினியாய் கூறு.

அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை
மறத்தலி னூங்கில்லை கேடென்—றுறுத்தியசொ
லுன்னி யருளொடுமா டுள்ளாரெங் குன்றைமுனி
நன்னிதியென் றுளாவர் நன்கு.

கன்னுவென் றீனர் கடைத்தலையி னல்குரவா
லெந்நாளுஞ் செல்லா தெளியனேன்—றன்னும
முள்ளன்பிற் சொல்வா ருடன்கூடக் குன்றைநகர்
வள்ளலருள் செய்வார் மகிழ்ந்து.

மங்கையர்கண்வேன்முறுவன்மௌவலிதழ்செவ்வாம்பல்
கொங்கைநிரம் புப்பாற் குடமென்றே—யங்கவர்குற்
றேவல் புரிவா ரிடத்தணுகா தெங்குன்றைக்
காவலனை நெஞ்சே கருது.

இன்னு திரக்கப் படுத லிரந்தவ
ரின்முகங் காணு மளவென்னு—நன்மொழிதேர்ந்
தீந்தின் முகங்காண்பா ரெய்துவர்நெஞ் சேகுன்றை
வேந்தினருட் செல்வம் விழைந்து.

என்னிதயம் புல்லறிவா லிச்சகவாழ் வைச்சதமென்
றுன்னியவா மேற்கொண் டுழலாம—னின்னிருதாட்
காணுவன் புற்றூர்க் கருண்மொழித்தே வாவடிமை
யானுவ தென்றோ வினி.

இந்தவுடல் பொய்யுறவா மென்றான்றோர் நன்குரைக்கு
மந்தமொழி தேறு தலைமனமே—நந்தவில்சீர்
நற்றிருப்ப ணிப்பேட்டை நஞ்சேக் கிழார்கழலி
லுற்றிருப்ப தெவ்வா றுரை.

வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணான்
செத்தான் செயக்கிடந்த தில்லென்னு—மத்தேவர்
வாக்குக் கிலக்காவார் மாண்சேக் கிழாரினரு
ளேக்குக் கிலக்கோ நவல்.

உற்றூர் தனதன்போ லுற்றாலு நல்குரவோ
டெற்றா லுமியு முதவார்நின்—பொற்றாளே
யேமமு நன் னட்புமெனக் கென்றருள்வாய் செங்கமல
மாமகள்வாழ் குன்றைமுனி வா.

சேதுமுதற் றீர்த்தங்கள் சென்று படிந்திடினும்
யாதுபய னெஞ்சே யியம்புதியா—லோதுகுன்றை
நாயகனை நம்மிடிதீர் நன்னிதியை யோர்கணமு
நேயமுட னெண்ணாத நீ.

அற்கா வியல்பிற்றுச் செல்வ மதுபெற்றா
லற்குப வாங்கே செயலென்னு—நற்குறளுட்
கொண்டன் பருக்குதவிக் குன்றைநகர்க் கொற்றவற்குத்
தொண்டன்பிற் செய்வீர் தொழுது.

பொய்க்கடிமையாய்மண்பெண் பொன்னாசைகொண்டலைவேன்
மெய்க்கடிமை யாயுன்னை மெச்சுவனோ—செய்க்கயல்கள்
பைங்கமுகின் பாளையுகப் பாய்திருப்ப ணிப்பேட்டை
யைங்கரன்றா னத்தமர்ந்த வா.

நல்லார் பருவரலு நன்னெறியிற் செல்லாத
பொல்லார் பெருமிதமும் போக்கிறைகாண்—வில்லாகக்
குன்றைவளைக் குந்தில்லைக் கூத்தன் றிருவருளாற்
குன்றைநக ரூற்பவிக்குங் கோன்.

அன்பகத் தில்லா வுயிர்வாழ்க்கை வன்பாற்கண்
வற்றன் மரந்தளிர்த் தற்றெனலாற்—சுற்றமுடன்
மற்றவர்பா லன்பொடருள் வைத்தொழுகிச் சேக்கிழார்க்
குற்றசிறப் புப்புரிவீ ரோர்ந்து.

காலன்வருஞ் சீவாந்த காலத்தென் சிந்தையைநின்
கோலமலர்ச் சேவடியிற் கூட்டுவையோ—சீலமிகும்
பொய்யகல்குன் றத்தூர்ப் புகழ்சேக் கிழார்குடியில்
வையமுய்ய வந்துதித்த வா.

உன்புகழை யோர்கணமு முள்ளன் புடன்கேளாப்
புன்புலைய னென்னைப் போதனுமேன்—வன்புவியிற்
செங்கைகடுக்கப்படைத்தான்செப்புதொண்டர்சீர்பாவுங்
கங்கை குலதிலகா கா.

ஈத்துவக்கு மின்ப மறியார்கொ ளுமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவரென்னு—மத்திருவாக்
கோர்ந்தளித்தின் புற்றன் புடன்சேக் கிழார்மலர்த்தாள்
சேர்ந்தவருக் குண்டாஞ் சிறப்பு.

என்னுள்ளத் துள்ள தியமா வெனைப்பிடிக்க
வுன்னுள்ளத் துள்ளியுருத் துற்றனையேன்—முன்னிற்குங்
கன்னிமதில் சூழ்குன்றைக் கற்பகமாஞ் சேக்கிழார்
பொன்னினொளிர் பாதாம் புயம்.

இல்லாமை யாலிங் கிழிவுறினு நின்புகழைக்
கல்லார்பி னென்றுங் கடையேனைச்—செல்லாமல்
வைத்தா யதுவுமொரு வாழ்வா மருள்குன்றைக்
கூத்தா கருணா கரா.

நாச்செற்று விக்குண்மேல் வாராமு னல்வினை
மேற்சென்று செய்யப் படுமெனலாற்—சீர்ச்செல்வர்
சிந்தித் தமர்குன்றைச் சேக்கிழார் பூக்கழலை
வந்தித்து நெஞ்சே வழுத்து.

பொய்யறிவு நீங்கிப் புனிதராய்ப் பாசமறு
மெய்யறிவு தோன்றியின்ப மேவுவர்காண்—செய்யமல
ரம்மா னெடுகலைமா னன்புற் றமர்குன்றைப்
பெம்மான்வெண் ணீறணிந்த பேர்.

அன்புடையா ருன்னை யனுதினமும் வந்தித்தே
யின்புறமூ வாசையினு லிங்கடியேன்—றன்புறுத
னன்றன் றெழிற்குன்றை நாதவருள் செய்வதெனக்
கென்றன் றினிதேத்து வேன்.

பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யாலென்னும்-பொய்தவிர்சொ
னன்றுணரேன் குன்றைநகர் நம்பாவெவ் வாறன்பா
லின்றுன் பணிபுரிவேன் யான்.

செங்கமல நீர்வயல்சூழ் சீர்த்திருப்ப ணிப்பேட்டைத்
துங்கமணிக் கோயிற் றுதிக்கைமுகன்—றங்குமிடத்
தின்புடன்வாழ்ந் தன்பர்க் கினிதருணஞ் சேக்கிழார்
பொன்புரைதா ணெஞ்சமே போற்று.

ஐங்கரன்வை வேல னருட்சுந்த ரேசனரி
தங்கையன்ன பூரணிநற் றண்டிமகிழ்ந்—தெங்களைநீ
வந்தித்துள் ளன்பரையாள் வாயெனவெஞ் சேக்கிழார்
சிந்தித்திங் குற்றுார் சிறந்து.

கேட்பினுங் கேளாத் தகையவே கேள்வியாற்
றோட்கப் படாத செவியென்னுந்—தாட்கமலன்
சீர்க்குறள்கண் டெங்குன்றைச் செல்வர்பொருள்சேர்புகழ்கேட்
பார்க்குலகி லொப்பார் பகர்.

ஐங்கரனுண் டைம்ப தமர்ந்தருளத் தானத்தை (மணிப்
பெங்களையாள் சேக்கிழார்க் கின்றளித்தோர்—துங்க
பொன்னு லயத்தினிது புக்கமர்ந்த தாலிவரை
யென்நாளுந் தாழ்வீர்வந் திங்கு.

புத்தலரிட் டுள்ளுருகிப் போற்றிவிழி நீர்சொரியச்
சித்தர்பர வுங்கருணைச் செல்வங்கா—ணித்தனமர்
தேங்குபுனல் வாவித் திருப்பணிப்பேட் டைத்தளியி
லீங்குவந்தா ளெஞ்சேக் கிழார்.

பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங்
கருமமே கட்டளைக் கல்லென்—றருள்சொ
னயந்துதிருத் தொண்டர்க்கும் நஞ்சேக் கிழார்க்கும்
வியந்துகுரு பூசைபுரி வீர்.

ஓங்குகுன்றைச் சேக்கிழார்க் கோதும்வெண் பாமாலை
யிங்குரைப்பார் கேட்பா ரிசைபெறுவா—ராங்கமர
ரன்பொடெதிர் கொள்ளவிருந் தாவார் தருநிழலி
லின்பொடமர் வார்கா ணினிது.